# ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளின் வகிபங்கு

திருமதி கிஸ்ணவேணி விவானந்தராசா,

ஆய்வுச்சுருக்கம் :

சிறுவர்கள் விந்தையானவர்கள், நிகழ் உலகில் கற்பனை உலகையும், கற்பனை உலகில் நிகழ் உலகையும் நுண்மையாக ஆய்வுசெய்யும் துடிப்புமிக்க இளம் மனநிலை உடையவர்கள். புதிர் நிறைந்த நிகழ் உலகில் தங்கள் கற்பனைகளாலான தனித்தனி உலகங்களை ஒவ்வொரு சிறுவர்களும் உருவாக்கிக்கொண்டே வளர்கிறார்கள். இது அவர்களின் தனிப்பட்ட உலகம். சிறுவர்களின் உலகை புரிந்துகொள்வது ஓர் அலாதியான அறிவுப் போராட்டம். அப்போராட்டத்தில் சுகமான மனநிலையில் போராடியே 'குழந்தை வளர்ப்பை' மேற்கொள்ள முடியும்.

மனிதன் தன் நுண்ணறிவு, ஆக்கத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் "கல்வி" எனும் பயிற்சித் தத்துவத்தை வடிவமைத்திருக்கிறான். இது ஒவ்வொரு சிறுவர்களுக்கும் அடிப்படையான உரிமையாக சமூகத்தில் கொள்ளப்படுகிறது. கல்வியின் முதன்மையான நோக்கம், குழந்தையின் அறிவு வளர்ச்சி நல்லமுறையில் அமைவதற்கும் அதனூடான பயனுள்ள பெறுபேறுகளும் மாற்றங்களும் திருப்பங்களும் தோன்றுவதற்கு உதவி செய்வதாகும். ஆரம்பக்கல்வியில் ஈடுபடும் சிறுவர்களின் கல்வி முறைமையானது அவர்களின் உடல் வளர்ச்சி செயல்திறன் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, சமூகவியல்பு வளர்ச்சி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் போக்கினை அடிப்படையாக கொண்டிருக்கிறது.[1]

பிள்ளைப் பருவத்தினர் ஆர்வத்துடன் செயலாற்றக் கூடியவர்கள், புதிய நடத்தை முறைகளை எளிதில் கற்கத் தேவைப்படும் நெகிழ்ச்சிப் பண்பு கொண்டவர்கள். அத்தோடு வாழ்வியல் நடத்தை முறைகளைக் கற்க உதவும் நெகிழ்ச்சிப் பண்பின் மூலம் சிறுவர்கள் தங்கள் செயற்பாட்டை அன்றாட நடைமுறைச் சூழலோடு ஒப்பிட்டுப்பார்த்து வளர்கின்றனர். இதனடிப்படையில் இப்பருவத்தினரின் கல்வி, செயல்முறைக் கல்வியாக (Active methods of learning) ஆக இருக்க வேண்டும்; இருப்பது நல்லது என இன்றைய கல்வியியல் கொள்கைகள் வலியுறுத்துவது கவனிக்கத்தக்கது .

இக்கல்விமுறையினடிப்படையில் கலையின் ஊடாகக் கல்வி, மற்றையது விளையாட்டு மூலம் கல்வி என்பன முக்கிய வழிமுறைகளாக கருதப்படுகின்றன. இதன் காரணமாக பாடசாலைக் கல்விக்குப் புறம்பானதாகக் கருதப்பட்ட இசை, நடனம், நாடகம், ஓவியம் ஆகிய அழகியற்கலைகள் யாவும் கல்வியின் ஒரு பகுதியாக கருதப்படுகின்றன. அதேபோல விளையாட்டு மற்றும் உளக்கிளர்ச்சி தரும் விருப்பமான வேலைகளில் ஈடுபடுதல் என்பவைகளும் சிறுவர்களுக்கு உற்சாகமும் புத்தூக்கமும் தரவல்லவை என்பதால் இவைகளும் வரவேற்கப்படுகின்றன. இந்தவகையில் சிறுவர்களின் மனதையும் புலன்களையும் புத்துணர்வுடன்கூடிய கற்பனை நிலைக்கான தளங்களைக் கல்வி உருவாக்கித் தர வேண்டியிருக்கிறது.

இதனடிப்படையில் சிறுவர்களின் உடல் உள அறிவு திறன் மனப்பாங்குகளை வழிப்படுத்துவதாக கல்விச் செயற்பாடுகள் முன்மொழியப்படுகின்றன. அத்தோடு அவற்றை இணைக்கும் பாலமாகவும் பயிற்சியளிக்கும் மகிழ்ச்சியான ஊடகமாகவும் இச் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் செயல்படுகின்றன.

**திறவுச் சொற்கள்:** சிறுவர் அரங்கச் செயற்பாடுகள், செயல்முறைக் கல்வி, சிறுவர்கள், கல்வி.

## அறிமுகம் :

"கட்டாயம் (Ought), கவனம் (Concentration), அதிசயம் (Wonderful) ஆகிய கருத்துக்களைக் கொண்டு இயங்கும் 'கல்வி' ஆனது மனமுயற்சியின் வினைப்பயனாகும் வகுப்பறையிலும், பாடசாலையின் பிற சூழல்களிலும் அலைந்து திரிந்து கதைபேசி, விளையாடி உறவு கொண்ட பின்னரே சிறுவர்கள் பாட வகுப்புகளில் மனஇறுக்கத்திலிருந்து விடுபட்டு தெளிந்த மனநிலையுடன் கல்வி கற்க முனைகின்றனர். எழுதுதல், படித்தல் எனும் ஆரம்ப நிலையிலிருந்து பொருள்களின் செயல்பாடுகள், நிலைப்பாடுகளை அறிதல், நிகழ்வுகளின் காரண காரியங்களை அறிதல் என்ற கற்றல் வினைப்பயன் தளராத மனமுயற்சிகளின் காரணமாகவே நிகழ்கிறது.

குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பது மிகவும் எளிதாவது எப்போது? என்றால், வினையாற்றல் வண்ணம் நிறைந்ததாகவும் வாழ்க்கையின ஆவலை ஊட்டுகின்ற ஒரு பகுதியாகவும் தெளிவான விம்பங்களாகவும் செவிக்கினிய ஒலிகளாகவும் இருக்கும் பொழுதுதான். இவ்விம்பங்களும் ஒலிகளும் கூட்டாகச் செயல்படும் நாடகப்பாங்கே அவ் எளிமையாக்கலுக்கு தகுந்த வடிவம் ஒவ்வொரு எழுத்தின் வரிவடிவமும் ஏதோ ஒரு இயற்கை பிம்பத்தின் ஓவிய இன்பமாகவே சிறுவர்களை சென்றடைகிறது. இவ்ஓவிய இன்பத்தை அனுபவிக்கும் சிறார்களின் மனநிலையில் ஆசிரியரின் மனநிலை ஆற்றும் நாடக பாங்கிலான உறவு எழுத்தை பொருள் பொதிந்த ஒளி-ஒலிக்குறியீடாக அவர்களின் மனதில் பதியச் செய்கிறது.

உதாரணமாக 'அ' எனும் உயிரெழுத்து (எண்வடிவம் உட்பட பிற எழுத்துக்களும்) அம்மா, அணில் போன்ற விம்பங்களுடனும் புதிய ஒலியுடனும் தொடர்புபடுத்தியே ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. அதேபோல் பொருள்பொதிந்த வார்த்தைகளின் படிமத்தன்மை கொண்ட அன்பு, வீரம், மென்மை, கடமை, உழைப்பு போன்ற வார்த்தைகளும் பல்வேறு சம்பவங்களால் கதைகளால் அதிசயம் வாய்ந்த சூழ்நிலைகளுடன் கற்பிக்கப்படுகின்றன.

கல்வி என்பது வெறும் பொருள் அறிவை பெறுவது மட்டுமன்று. எதிர்காலத்தில் நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் மகிழ்ச்சியுடனும் வெற்றியுடனும் வாழ்வதற்கான அடிப்படைப் பயிற்சிகளை அளிப்பதாகவும் அமைகிறது. வாழ்க்கையில் வெற்றி மகிழ்ச்சியை பெறுவதில் மனவெழுச்சிகள் இதற்கு அடிப்படையாக அமைகின்றன.

மனிதனிடம் கலை உணர்வுகள் தோன்ற மனவெழுச்சிகள் காரணங்களாக அமைகின்றன. சிறுவர்களிடம் இயல்பாகவே மனவெழுச்சிகள் துடிப்புடன் செயல்படுகின்றன. அவை வளர்ந்து உயர் நிலை அடையும் போது கொள்ளுகின்ற மனவெழுச்சி முதிர்ச்சி மனவெழுச்சி முதிர்ச்சியே (Emotional Maturity) பிள்ளைப் பருவத்தினரை மனித வாழ்க்கையுடன் ஒன்றிணைக்கிறது. இதுதான் சிறுவர்களுக்கு கற்ற கல்வியின் தன்மையையும் பயன்பாட்டையும் முழுவதுமாக அறிந்துகொள்ளும் பக்குவத்தை கொடுக்கிறது.

கற்ற கல்வியின் தன்மையையும் அதன் பயன்பாட்டையும் அறிந்து அவற்றை நடைமுறையோடு பொருத்திப் பார்க்கும் மனவெழுச்சி முதிர்ச்சியைப் பெறாத நிலையில் கல்விப்பாடம் என்று ஏதோ ஒரு பயனற்ற மனப்பதிவாகவே நிறைவடைந்து விட வாய்ப்பிருக்கிறது. இக்கருத்தே இன்றைய ஆரம்பகல்விக்கான கல்வியலாளர்களின் தேடலாக இருக்கிறது. குதூகலத்துடன்கூடிய கல்வியியல் செயல்பாடுகள் பற்றி பல்வேறு ஆய்வுகளும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன.

இலங்கையின் கல்வி வரலாற்றில் பாரிய ஒரு கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை 1998 ஆம் முன்மாதிரியாக கம்பஹாவில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1999 இல் நாடு முழுவதும் அமுலாக்கப்பட்டது. அம்மறுசீரமைப்பு ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என மூன்று நிலைகளில் கட்டமைத்திருந்தாலும் ஆரம்பக் கல்வியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் நீண்டகால நோக்கத்தையும் நீடித்த மாற்றத்தையும் ஏற்படுத்தும் என்று நம்பப்பட்டது. அந்தவகையில் ஒன்று தொடக்கம் ஏழாம் வகுப்பு வரையான 12 வயதுக்கு உட்பட்ட மாணவர்களை உள்ளடக்கியதான ஆரம்பப்பிரிவு வகுப்புகளில் பாடவிதானம் கற்றல் கற்பித்தல் முறையில், குணநல உள்ளீடுகளில் என பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இது புலமை சார்ந்த அல்லது அறிவு மையக் கல்வி என்ற நிலையில் இருந்து தேர்ச்சி மையக் கல்வியை நோக்கி நகர்ந்தமையே அம்மாற்றம் எனக் கூறலாம்.

சிறுவர்கள் ஒவ்வொரு படத்திலும் புதிய தேர்ச்சியை அடைய வேண்டும் என்பது மட்டுமல்லாது, அத்தியாவசியமான அடிப்படையான கற்றல் தேர்ச்சிகளிலும் பாண்டித்திய நிலையை அடையவேண்டும் என்பது இந்த தேர்ச்சி மையக்கல்வியின் முக்கிய பண்பாகக் கருதப்பட்டது. இங்கு ஒவ்வொரு தேர்ச்சியையும் மாணவன் அடைவதற்கு சில வழிமுறைகள் முன்மொழியப்பட்டன. விளையாட்டுக்கள், குழுச்செயற்பாடுகள், எழுத்துக் கலைகள் என்பவை இம்முறைகளாகும்.

அறிவு புலமை சார்ந்த நிலையில் இருந்து நோக்காது, உணர்வுபூர்வமான உதவியாகவும் ஒரு அனுபவமாகவும் கல்விச் செயற்பாடு நோக்கப்பட்டு செயல்படுத்தப்படும் போது மட்டும்தான் இந்த மாற்றம் சாத்தியமாகும். அத்தோடு இத்தகைய சந்தர்ப்பத்திலேயேதான் முன்னர் குறிப்பிட்ட கற்றல் கற்பித்தல் முறையும் முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கும்.

"வகுப்பறை என்பது பௌதிக ரீதியிலான சிமேந்து, கல் கொண்டு கட்டிய ஒரு கட்டடம் அல்ல. உயிர்த்துடிப்புள்ள பிள்ளைகள் மகிழ்வுடன் இயங்கும் ஒரு இடம்" என்பது முக்கியமானது. உயிர்த்துடிப்புள்ள வகுப்பறைச் செயல்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குச் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் ஆசிரியர்களுக்குப் பெரிதும் கைகொடுக்கும். பிள்ளைகளிடையேயும் ஆசிரியர்களுக்கிடையேயுமான நெருக்கமான நேரான உறவுநிலை வளரவும் விழுமியங்களைக் கைக்கொள்ளக்கூடிய மனப்பாங்கை வளர்த்தெடுக்கவும் இச்சிறுவர் அரங்க நடவடிக்கைகள் பங்களிப்புச் செய்கின்றன.

## ஆசிரியர்

மனித சமூகத்தில் ஈடு இணையற்ற பணியாக ஆசிரியப்பணி கருதப்படுகிறது. தன்னை அர்ப்பணித்துக் கொண்டு குழந்தைகளுக்காக செயலாற்றும் ஆசிரியரின் பங்கு குழந்தை வளர்ப்பிலும் கல்வி வளர்ச்சியிலும் மிக முக்கியமானதாகும். இந்நிலையில் ஆசிரியரின் கற்பித்தல் முறைகளில் சிறார்கள் ஆசிரியர்களை எவ்வாறு அணுகுகின்றனர், ஆசிரியர் தன்னை எப்படி வெளிப்படுத்துகின்றார் என்ற கற்றல்-கற்பித்தல் ஊடாட்டத்தில் 'உறவு கலந்த ஒரு வெளிப்படும் திறன்' நிலவுவதைக் காணலாம். கற்றுத்தரும் பாடத்தின் பொருள் எவ்வளவு சுவையானதாகவும் அவசியமானதாகவும் இருந்தாலும், அது எவ்வாறு கற்றுக்கொடுக்கப்படுகிறது என்பது ஆசிரியரைப் பொறுத்தவரை மிக இன்றியமையாததாக இருக்கின்றது.

சிறுவர்கள் உணர்ச்சி மயமான செயல் அனுபவத்தையே எந்நிலையிலும் விரும்புகின்றார்கள். ஒரு கருத்தின் உண்மையை அறியும் வேட்கை உடையவர்களாக சிறுவர்கள் இருப்பதால் ஒரு கருத்தையோ பொருளையோ மனப்பாடமாகக் கற்றுக்கொள்வதைப் பெரிதும் விரும்புவதில்லை. எழுதுதல், படித்தல், வீட்டுப்பாடம், மனப்பாடம் என இயங்கும் புத்தகப் படிப்புக்காக மட்டும் அவர்கள் பாடசாலைக்கு வருவதில்லை. மாறாக ஒவ்வொரு நாளும் பாடசாலையில் தங்களுக்காக காத்திருக்கும் புதியவற்றைக்

எதிர்கொள்வதற்காகவும் இடைவேளைக்காகவும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வதற்காகவும் ஆசிரியர்களோடு பேசுவதற்காகவும் என பல எதிர்பார்ப்புக்களுடன் வருகிறார்கள். அவர்களுடன் கலந்து பழகி அன்புகொண்டு உறவாடிய பின்னர் பாடத்தைக் கற்பிக்கத் தொடங்குவது மாணவர்களுக்குத் தேவையான ஒன்றாகிறது.

சிறுவர்களுடன் அன்பையும் – உறவையும் நிறுவிச் செயலனுபவமாகக் கற்பித்தலை மேற்கொள்வதில் அரங்க உத்திகளான போலச்செய்தல், பாத்திரமாக நடித்தல், கற்பனையான சூழல்களை உருவாக்குதல் போன்றவை பங்குகொள்கின்றன. இவை ஆசிரியருக்கு பெரும் உதவியாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு சிறுவருக்கும் பல குடும்பப் பிரச்சினைகளோடும், வெவ்வேறுபட்ட குடும்பப் பின்னணிகளோடும் வருபவர்கள். அவர்களுக்குப் பல நிலைகளில் உடல்-உள இறுக்கங்கள் இருக்கும். அதைத் தளர்த்தி அவர்களை அமைதியாக ஆற்றுப்படுத்தி, அவர்களோடு மகிழ்ச்சியாகப் பேசி உறவாடுவது கற்பித்தலின் முதல்படியாகும்.

சிறுவர்களுடன் உறவாடும்போது நமது இயக்கம் இயல்பானதாக இருந்தால் சிறுவர்கள் நம்மிடம் இயல்பாக பழகுவதில்லை. மாறாக செயற்கையாகச் செயல்பட முனைகின்றார்கள். நமது இயக்கம் வித்தியாசமானதாக இருக்கும்போது அவர்கள் நம்மிடம் இயல்பாக உறவாடுகிறார்கள். சிறுவர்களின் இவ்வுளவியல் கோட்பாடு சார்ந்த செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு அரங்கச் செயற்பாடுகள் வழிகோலுகின்றன.

உதாரணமாக இச்சிறுவர்கள் தங்களது பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் வெளிநபர்கள் ஆகியோரிடம் பழகும் விதத்தை விட ஒரு கோமாளிக் கலைஞரிடம் சிரித்து கதைத்து பேசி பழகுவது நெருக்கமாக இருக்கும். சிறுவர்களின் விருப்பம், மகிழ்ச்சி, கொண்டாட்டம் என்பவைகளைப் பூர்த்தி செய்வதால் இச்சிறுவர்களுக்குக் கோமாளியுடனான உறவுத்தளம் அலாதியானதாக அமைந்துவிடுகிறது.

## வகுப்பறை

ஒரு செயலினைச் செயல்படுத்தும் ஆசிரியரின் உடலியக்கச் செழுமையாலும், ஒரு கருத்தை விளங்கப்படுத்தும் ஆசிரியரின் குரலின் தொனியாலும், பாடத்தின் மீதான விருப்பம், ஈடுபாடு என்பன தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகிறது. உடல் மன பாவனைகளாலேயே வகுப்பறையில் பல்வேறு சூழல்களை ஆசிரியரால் நிறுவமுடியும். அத்துடன் வகுப்பறையின் அசையும் பொருள்களை உதாரணமாக

நாற்காலிகள், மேசைகள், பெட்டிகள் உயர் தளங்கள் என்பவற்றை மாற்றி மாற்றி அமைப்பதன் மூலம் வகுப்பறையின் உள்ளகச் வெளியை மாற்றியமைக்கலாம். இது மாணவர்களுக்குரிய ரசனை மிக்க வெளிப்பாட்டுத் தளமாக அமையும்.

### சிறுவர் அரங்கச் செயற்பாடுகள்

சிறுவர்களின் உணர்வு வெளிப்பாட்டு ஊடகங்களாக பின்வரும் அரங்கச் செயற்பாடுகளை முன்வைக்கலாம்.

ஆடல், பாடல், மொழிப்பயன்பாடு, கவிதை, கதைசொல்லல், விளையாட்டுக்கள், ஓவிய வெளிப்பாடு, கண்காட்சிகள், பயிற்சிப் பட்டறைகள், நாடக அளிக்கைகள், கொண்டாட்டங்கள், விழாக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட வகையில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் சிறுவர்களின் உளவியல் பாங்குகளை பாதிக்காத வண்ணம் இவ்வரங்கச் செயற்பாடுகளுக்கூடாக மேற்கொள்ளப்படுவது வரவேற்கத்தக்கது.

சிறுவர்களிடம் காணப்படும் துருவித் துருவி ஆராயும் திறன் புதியன அறியும் ஆற்றல், போலச் செய்யும் அல்லது பாவனை பண்ணும் ஆவல், விளையாட்டில் ஈடுபடும் ஆர்வம், இசைக்கும் சந்தத்திற்கும் ஏற்ப அசைவது, போட்டி மனப்பாங்கு, கதை கேட்கும் விருப்பம் புதுமையை தேடும் சிந்தனை என்பவற்றைக் கற்பித்தல் நோக்கோடு இணைப்பதற்கு இச்சிறுவர் அரங்கு செயற்பாடுகள் பல வகைகளில் உதவி புரிகின்றது.

### விளையாட்டுக்கள்

விளையாட்டு என்ற சொல்லை விளை என்றும் ஆட்டு என்றும் இரண்டாகப் பகுத்து விளை என்றால் விருப்பம் என்று பொருள் கொண்டு விரும்பி ஆடும் ஆட்டு விளையாட்டு என்று தேவநேயப்பாவாணர் விளக்குகின்றார். மனித இனத்திற்குப் பொழுதுபோக்கையும் புத்துணர்ச்சியையும் இவை அளிக்கின்றன. சில விளையாட்டுகள் உடல் திறனையும் சில விளையாட்டுகள் மனத்திறனையும் புத்துயிர் பெற வைக்கின்றன.

சிறுவர் நாடகப் பட்டறைகளில் குழுக்கள் குழுக்களாகப் பிரித்து விளையாட்டுக்கள் ஊடாக நடிப்புகளை மேற்கொள்வது வழக்கம். சிறுவர், பாவனை பண்ணும் மிருக மற்றும் பறவை உருவங்களையோ நவீன காலத்து இயந்திர அசைவுகளையோ பாவனை செய்து விளையாடுவர். அவர்கள் செய்யும் பாவனைகளை முழுமை அடையவைப்பதும் அவர்கள் சூழலில் கற்றுக்கொண்ட

செய்தியைப் பூரணப்படுத்துவதும் முக்கியமானது. இதன் மூலம் சரியான பார்வை (QERQECTIVE) ஐப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வழி கிடைக்கின்றது. பாடசாலை வகுப்பறைச் சூழலில் மாணவர்களுக்கு உடல் மன தளர்ச்சியை ஏற்படுத்தி அவர்களைச் சுறுசுறுப்பாக்குவதன் மூலம் கற்றல் கற்பித்தல் நடிவடிக்கைகளில் ஈடுபட உற்சாகமூட்டலாம்.

## கதை சொல்லல்

ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் நோக்கங்கள் பல இருக்கும் கதை சொல்லுதல் என்பதைப் பொறுத்தவரைக்கும் களிப்பூட்டல் அல்லது மகிழ்வூட்டல் அதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாக அமைகிறது. பிள்ளைகள் கதை கேட்க விரும்புவார்கள். கதைகளை மீண்டும் மீண்டும் கேட்பதன் ஊடாகப் பிள்ளைகள் தமது கற்பனை வளத்தை வளர்த்துக்கொள்கிறார்கள். கதைகளின் ஊடாக பிள்ளைகள் பலவகையான அறிவு சார்ந்த விடயங்களை மகிழ்ச்சியாக அறிந்து கொள்கின்றனர். இவ்வாறு கதை சொல்வதன் ஊடாக அடையும் இலக்குகள் என்பன பிள்ளைகளது ஆளுமை விருத்தியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமன்றி கதைகளின் ஊடாக நல்ல ஒழுக்கங்கள் பண்பாடுகள் ஊடுகடத்தப்படுவதையும் காணலாம்.

உதாரணமாக வரலாறு எனும் பாடப்பரப்பிலுள்ள மன்னர்கள், அறிஞர்கள் போன்றோரது வாழ்க்கை வரலாறுகள் அவர்களின் பணிகள் தொடர்பான விடயங்களை இக்கதைசொல்லல் உத்தியினூடாக எளிமையாகக் கற்பிக்கலாம்.

## பயிற்சிப்பட்டறைகள் :

அரங்கச் செயற்பாடுகளில் நாடகப் பாங்கான விளையாட்டுகள் சுவாரஸ்யமானவை. சிறு பிள்ளைகள் பெரும்பாலும் அவர்கள் வாழ்கின்ற சூழலில் நடப்பவற்றையே பாவனை அல்லது போலச் செய்தல் மூலம் வெளிப்படுத்துவார்கள். மண் விளையாட்டு முதல் கோயில் வழிபாடுகள் சார்ந்த விளையாட்டுகள் வரை எல்லாவற்றிலும் பிள்ளைகள், தான் கண்டது கேட்டதையே திரும்பத் திரும்பச் செய்து பார்க்கின்றனர். "வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்பதற்கிணங்க பாவனை விளையாட்டுகள் மூலம் சிறுவர்கள் உலகை ஆராய்கின்றனர். அதை அறிய முற்படுகின்றனர். பாடசாலைகளில் ஒழுங்கமைக்கும் பயிற்சிப்பட்டறைகளில் செய்யப்படும் இந்த நாடகப் பாங்கான விளையாட்டுக்களின் அடிப்படையில் குறிப்பாக சமூக விஞ்ஞான பாடங்களின் சில விடயப்பரப்புகளைச் சலிப்பின்றி கற்பிக்கலாம்.

உதாரணமாக விஞ்ஞான

பாடத்தில் வரும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மற்றும் சூழலியல் தொடர்பான கருத்தாக்கங்களை மேற்சொன்னவாறு செய்து ஆசிரியர்கள் முயன்று பார்க்கலாம்.

**படைப்பாக்க நாடகச் செயற்பாடு:**

படைப்பாக்க நாடகச் செயற்பாடு என்பது புத்தளிப்புப் பண்பு கொண்டதாக இருக்கும். எந்த வகையிலும் திட்டமிடப்படாது உடனடியாக ஒரு பிரச்சினையையோ சூழ்நிலையையோ தெரிவுசெய்து அது சம்பந்தமான சிந்தனைகளையும் விடயங்களையும் அதற்கான எதிர்வினைகளையும் பங்குபெறுவோர் தன்னெழுச்சியாக வெளிப்படுத்தும் செயற்பாடு புத்தளிப்பு எனப்படுகிறது. இதனால் பங்குபற்றுபவர்கள் தாமாக சிந்தித்து விடை காணும் முயற்சியில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுவதோடு ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காணும் முறைமையையும் கண்டறிந்து கொள்கின்றனர்.

மேற்சொன்ன படிமுறைகளைத் திரும்பத் திரும்பச் செய்யும் பொழுது அங்கு ஒரு ஒழுங்கு வருகிறது. அதேபோல் முயற்சி செய்தல் பிழைகளை இனங்கண்டு கொள்ளுதல். மீண்டும் முயலுதல் என இந்த நடவடிக்கை நீண்டு செல்கின்றது. இதன்போது பிழை விட்டிருந்தால் பட்டு நொந்து திருந்துதல் எனப் பரிதலோடு கூடியதொரு கற்றல் முறைக்கு மாணவர்களைப் பழக்கலாம். இந்த வழிமுறை ஒரு நாளிலோ பல நாள்களிலோ பூர்த்தி செய்யப்படலாம். அவ்வாறு திரும்பத் திரும்ப நிகழ்த்திக்காட்டப்படும் பட்சத்தில் இச்செயற்பாடு ஒரு அரங்க ஆற்றுகையாக உருவெடுப்பபதற்கு உதவி செய்கிறது என்கிறார் நாடகவியலாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள். வகுப்பறையில் இசை நடனம் நாடகம் வாழ்க்கைத்தேர்ச்சி மனையியல் போன்ற பாடவிதான செயற்பாடுகளில் இம்முறையை பரீட்சித்துப்பார்க்கலாம். இது மாணவர்களுடைய பாடசாலை வாழ்விலும் சமூக வாழ்விலும் பாரிய நல்ல மாற்றங்களை ஏற்படுத்தக் காலாக அமையும்.

**சிறுவர் நாடகம் :**

நாடகச் செயற்பாட்டாளர் பேராசிரியர் கே. இராமானுஜம் அவர்கள் கூறுகையில் "குழந்தை நாடகம் என்றால் அதற்கு அடிப்படைத் தகுதி அதற்கான பார்வையாளர்கள் குழந்தைகள் என்ற எண்ணத்தில் தயாரிக்கப்பட வேண்டும். குழந்தைகளுடைய கற்பனையை வளர்த்து, அவர்களே சுயமாக பங்கேற்கும் திறமைகளை வளர்க்க வேண்டும். மேலும் குழந்தைகள் காட்சிப்பொருளாக கிளிப்பிள்ளை போல சொல்லிக் கொடுத்ததை ஒப்புவிப்பவர்களாகப் பயன்படுத்தப்படுதல் தவறு" என்றும் குறிப்பிடுகின்றார். சிறுவர்களை

இலக்குப் பார்வையாளர்களாகக் கொண்டு அவர்களின் உளமுதிர்ச்சிக்கேற்ற கருவை அடிப்படையாகக் கொண்டு கதை, காட்சிகள், பாத்திரங்கள், ஆடல், பாடல், எளிய உரைநடை, உடை, ஒப்பனை, காட்சியமைப்புகள் என பலவற்றை உள்ளடக்கி கட்டியெழுப்பப் பட்டதே சிறுவர் நாடகம் என்பது. இது சிறுவர் அரங்கச் செயற்பாட்டின் அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. ஏதாவதொரு பாடத்தின் குறிப்பிட்ட விடயத்தை கருப்பொருளாக வைத்துக் கொண்டு வகுப்பறையில் ஆசிரியரும் மாணவர்களும் ஒரு நாடகத்தை செய்து மேடையேற்றுவதன் மூலம் கல்வியும் கலையும் இணைந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடு செழுமையாக நடைபெற்று முடியும் என்பது மறுப்பதற்கில்லை.

**கொண்டாட்டங்கள், விழாக்கள் :**

அடுத்ததாக சிறுவர்களின் கல்வி வளர்ச்சியைச் சீரான போக்கில் வழிநடத்த அரங்க விழாக்களை ஒழுங்குசெய்யும்முறை இன்னுமொரு செயற்பாடாகும். சில மாதங்களிலோ ஆண்டிலோ பாடசாலைகளில் கொண்டாட்டங்கள் விழாக்கள் செய்யப்படுகின்ற பொழுது அங்கே மாணவர்களுடைய அறிவு திறன் மனப்பாங்குகளை வெளிக்காட்டுவதற்கான களங்கள் கண்டறியப்படுகின்றன.

மாணவர்கள் பெற்றோர்கள் உறவினர்கள் ஊரவர்கள் அதிபர் ஆசிரியர்கள் கல்விசார் பணிப்பாளர்கள் ஆகியோரை பார்வையாளராக கொண்ட கல்வியியல் கொண்டாட்டமாக வடிவம் பெறுகிறது. கல்வி கலை சமூகம்சார் கருத்தாக்கங்கள் அரங்க நிகழ்த்துகைகளாக மேடையேற்றப்படும். இதனூடாக பாடத்தின் முழு மனப்பதிவையும் மனவெழுச்சிகள் மற்றும் உள்ளுணர்வான இயல்பூக்கங்களின் வழி மனமகிழ்ச்சியை தனக்கான அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புக்களையும் இந்த அரங்கியல் விழாக்கள் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்குச் சோவியத் கல்வியியலாளர். அம்ன்வீலி சிறுவர்களுடன் நடத்திய "அரிச்சுவடி விழா" என்னும் நிகழ்வை உதாரணமாக சொல்லலாம்.

**முடிவுரை:**

1. ஆசிரியர் மற்றும் வகுப்பு மாணவர்களோடு இணைந்து செயலாற்றுவதன் மூலம் குறித்த பாடத்தில் தேர்ச்சியோடு கூடிய புரிதலை மற்றும் தெளிவை மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.
2. வகுப்பறைப் பாடங்கள் செயல்விளக்கமாக நடத்தப்படும் போது மாணவர்கள் தாங்கள் வெழிப்படுத்தும் திறனின் தன்மைகளை இலகுவாக அறிந்து கொள்ள முடிகிறது.
3. சிறுவர்களின் கற்றல் கற்பித்தல் செயல்பாடு வகுப்பறையில்

நடைமுறையான நிலையிலும், அரங்க வடிவில் கலைவழி அனுபவம் என்ற நிலையிலும் இரு விதமான பாடத் தெளிவைக் கொண்டதாக அமைகிறது.

4. சிறுவர்களின் மனநிலை ஒரு சிந்தனை ஓட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்போது இச்சிந்தனையினை ஒத்திருக்கின்ற சுவையான நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டும் தன்மை ஏற்படுகிறது.

5. சமூகத்தில் நிகழும் நடைமுறை மற்றும் பாரம்பரிய, விசேட நிகழ்ச்சிகளின்போது அதனை ஒத்த நிகழ்ச்சிகளைச் சிறார்கள் தங்களுக்கான தனிக் குணங்களுடன் பாவனை செய்து விளையாட முற்படுகின்றனர். இது அவர்களுக்கு உடல் உள மகிழ்ச்சியையும் அமைதியையும் கொடுக்கிறது.

6. இவ்வாறு அரங்க செயற்பாடுகள் மூலம் கல்வியைக் கற்கும் பொழுது இலகுவான கற்றல் கற்பித்தல் நடிவடிக்கைகள் சுமுகமாக நடந்தேறுவதோடு, கலையை நயந்து அதன் அழகியல் மனப்பாங்கோடு மாணவர்கள் பயணிப்பது என்பது சிறப்பானது. அதுமட்டுமன்றி கற்றலில் ஈடுபாடு, விருப்பம் என்பவற்றோடு, பல நன்மைகளையும் இச்செயற்பாடுகள் வழங்குகின்றன என்பதும் தெளிவாகின்றது.

7. இருந்தபோதும், ஆசிரியர்களுக்கு பணி பளு அதிகமாவது. ஆசிரியர்கள் லீவு எடுத்தால் உடன் பதில்ஆசிரியர்கள் இல்லை என்றால் வகுப்புகள் நடத்துவது சிரமமாக இருப்பது, வகுப்பில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பது, மாணவர்கள் உள்வாங்கும் அல்லது கிரகிக்கும் வேகம் மாறுபடுதல் எனச் சில குறைகள் காணப்பட்டாலும் அதை குறைகளாக நோக்கி கைவிட்டுவிடாமல் எதிர்கால மாணவர் சமுதாயம் நன்னெறிப்படுத்தப்படவேண்டும் என்பதையும் அதேநேரம் ஆசிரியப்பணி ஒரு அர்ப்பணிப்புள்ள பணி என்பதையும் கருத்தில் கொண்டு அதில் வரும் சவால்களைச் சுகமான சுமையாக கருதி சேவையாற்ற விளைவது போற்றுதற்குரியது.

**உசாத்துணை நூல்கள்:**


1. *வேலு சரவணன், 2015,தொடக்கக் கல்வியில் நாடகியம், புக்ஸ் பார் சில்ரன், சென்னை, பக் - 85-95.*
2. *தேவானந்.தே, 2005, வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு-கட்டுரைத் தொகுப்பு, செயல்திறன் அரங்க இயக்கம், யாழ்ப்பாணம், பக்-2-5, 30-40.*
3. *காமராசு.இரா, 2007, குழந்தைகளைக் கொண்டாடுவோம், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர், பக்-42.*
4. *மண்டூர் தேசிகன், 2006, உதவும் உள்ளங்கள்( சிறுவர் இலக்கியம்), கோல்டன் ஓவ்செற், கல்முனை.*
5. *சுகோம்லின்ஸ்கி, 1982, கல்வி, நியூசெஞ்சுரி புக் கவுஸ், சென்னை.*